1972 மார்ச் 28]

இடதுபுறமுள்ள, அதாவது வைகையாற்றிலிருந்து பேரணை மதகு பாலம் வரை உள்ள புதிய வரிசைக் கிராமத்தில் ஒன்று சேர்க்கப் பட்ட வாய்க்கால்கள் திட்டமாகும். மத்திய அரசுக்கு அனுப்பி ஒரு ஆண்டுக்காலம் ஆகிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசின் அனுமதியை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, திண்டுக்கல் வட்டத்தில் கோணப்பட்டி, களங்கையாறு, அஞ்சுகுளிப்பட்டி ஆகிய இடங் களில் சிறிய நீர்த் தேக்கங்கள் தேவை. அமைச்சரவர்கள் அதிலே 1-2 இடங்களைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். அவற்றை விரைந்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? வறட்சி மிகுந்த அந்தப் பகுதியில் இவைகள் மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால் அரசு விரைந்து நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிறிய நீர்த் தேக் கங்களைப்பற்றிய குறிப்பு தற்போது இல்லை, என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தத் திட்டங்களை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ஆ. முனியாண்டி : தலைவரவர்களே, அந்த வைகை மேம் பாட்டுத் திட்டம், வைகை அணைக் கால்வாய் சிமெண்ட் கான்கிரீட் மூலம் வருகிறது என்று சொல்லப்படுகிறது. அதில் மதகுப் பாசனம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. பெரியார் முன்னேற்றத் திட்டம் என்ற அடிப்படையில்தான் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் வேதசாத்தூர் தாலுக்காவில் கோடகனூர் திட்டம் போடப் பட்டதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோடகனூர் திட்டம்பற்றி விரிவான புலனாய்வு (டீடெயில்ட் இன்வெஸ்டி கேஷன்) நடைபெற்று வருகிறது.

திரு. நா. வெ. குருசாமி : சென்ற நிதி நிலை அறிக்கையில் ஆத்தங்கரைப்பட்டி ஸ்கீமைப்பற்றி குறிப்பிட்டு பணம் ஒதுக்கி யிருந்தார்கள். ஆனால் இன்னும் வேலை தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி தனி யாகக் கேள்வி போடவும். இந்தப் பட்டியலில் அது வரவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : மதுரை மாவட்டத்தில் பழனி தாலுக்காவில் வரதமாநதி நீர்த்தேக்கத் திட்டம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அதைப் பார்த்திருக்கிறார்கள்—அணை கட்ட தகுந்த இடம் என்று அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். அந்த அணைக்கட்டு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா, அந்த வேலை எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவர அறிக்கை யில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister how many spill-over schemes are pending completion in Madurai district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் இல்லை. மதுரை மாவட்டத்தில் பாலாறு-புரந்தலாறு, பரப்பலாறு திட்டங்கள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

பழவாற்று உபரி நீர்.

* 758. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் பழவாற்றினால் அடிக்கடி பயிர்களுக்கு ஏற்படும் வெள்ளச் சேதத்தினை தடுக்க பழவாற்றில் வரும் உபரி நீரை மாயூரம் தலைஞாயிற்றிலிருந்து பழவாற்றினை கொள்ளிடம் ஆற்றில் இணைத்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?